REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 5உ சனி (20—11—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 6உ ஞாயிறு (21—11—54) [இதழ் 137

இந்தியாவில் இன்னுமொரு இரும்பு ஆலை

மேற்கு வங்கத்திலிருக்கும் துர்க்காபூரில் ஒரு புதிய இரும்பு ஆலை துவங்கப்பட இருக்கிறது. அத்தொழிற்சாலை 1953-ல் உற்பத்தியை ஆரம்பிக்கும். பிர்லா சகோதரர்களின் தொழில் நிறுவனமும், ஒரு பிரிட்டிஷ் கம்பெனியும் சேர்ந்து ரூ. 10 கோடி செலவில் அமைக்கின்றனர் இத்தொழிற்சாலையை!

பிரிட்டிஷ் கம்பெனி முதலீடு செய்யும் பணம் 3 வருடத்தில் தவணைகளாகத் திருப்பித் தரப்படுமாம். உலக பாங்கியின் உதவியுடன், இந்திய தொழில் நிதி கார்ப்பொரேஷன், இதற்கு, பிர்லா தரப்பில் தரவேண்டிய முதலீட்டைத் தரும் எனத் தெரிகிறது.

(ஒரிசா மாநிலத்தில் இந்திய சர்க்கார், ஜெர்மானியர் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கும் எஃகுத் தொழிற்சாலையில் 1960-ல் தான் உற்பத்தி துவங்கும் எனத் தெரிகிறது.)

மேற்கு நேபாளத்தில் கொள்ளை-கொந்தளிப்பு

எட்டு கிராமங்கள் தீக்கிரை

கலகக்காரர் பட்டியலில் 15000பேர்

குழப்பத்தை கொல்ல விமானமூலம் படையாம்!

★

மேற்கு நேபாளத்தில் உள்ள நேபால்கஞ்ச் மாவட்டத்தில், சர்க்காரை எதிர்த்து கலகக்காரர்கள் குழப்பம் விளைவிக்கின்றனர். டாங் பகுதியிலுள்ள எட்டு கிராமங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள விடுகள் பல சுட்டெரிக்கப்பட்டுள்ளன.

பெரும் பணக்காரர்களுக்கு எதிராகவே இக்கொள்ளை நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. பெண்களைக் கொடுமைக்குள்ளாக்கும் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

கடந்த பதினைந்து நாட்களாக இக்குழப்பம் அங்கு தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், கலகக்காரர்களின் எண்ணிக்கை 15,000-க்குக் குறையாது இருக்கக் கூடுமெனவும் செய்தி குறிப்பிடுகிறது.

கலகக்காரர்களை ஒடுக்க, அரசரின் விசேட விமானம் மூலம், தேவைப்படும் பாதுகாப்புப் படையினரை அனுப்பும் முயற்சியை சர்க்கார் மேற்கொள்ள இருக்கிறது.

டாங் நகரில் வேலைபார்த்துவந்த ஒரு சர்க்கார் அதிகாரியை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டதில், இரண்டு அரசியல் கட்சிகளுக்குள் ஏற்பட்ட மனத்தாங்கலே இதற்குக் காரணம் எனச் செய்திகள் அறிவிக்கின்றன.

சைலான் தலைவரிடம் உள்ள அதிகாரத்தை நேபாள சர்க்காரின் பொது அதிகார வரம்பிற்குள் கொண்டுவர வேண்டுமெனும் மக்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதில், சர்க்கார் காட்டிவரும் அலட்சியமே, மேற்படி கொந்தளிப்புக்குக் காரணம் என்று நேபாளக் காங்கிரஸ் காரியதரிசி அறிவித்துள்ளார். உரிமை வேட்கை கொண்டுள்ளவர்களை ஒடுக்கி விடுவதின் மூலம் இம்மக்கள் கோரிக்கையை நிலையாக ஒழித்துக் கட்டிவிடலாம் என்று அந்த நிலப்பிரபு எண்ணி, அவர்களை ஒடுக்குவதில் முனைந்துள்ளார். அதுதான் இப்பெரும் குழப்பத்திற்கான மூல காரணம் என்றும் மேற்படி காங்கிரஸ் செயலாளர் அறிவிக்கிறார்.

இரா. நெடுஞ்செழியன் ஓய்வு பெறுகிறார்

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தம் உடல் நலம் கருதி, டாக்டர் ஆலோசனைப்படி ஓய்வு பெற்றுவருகின்றார்.

15—12—54 வரை, உள்ளூர், வெளியூர் அழைப்புகளை ஏற்று பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியாமலிருக்கின்றார்.

21—11—54-ல், திருப்பூர் முத்தமிழ் விழா நிகழ்ச்சிக்குத் தாம் வர முடியாதென்பதைத் திட்டமாக அறிவித்திருந்தும், பத்திரிகைகளில் 21-11-54-ல், திருப்பூர் முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதாக செய்தி வெளியிட்டிருப்பது பெரும் தவருகும்.

இதுபோல் தவருக செய்திகளை வெளியிட்டு பொதுமக்களிடமும், கழகத் தோழர்களிடமும் தவருன கருத்துக்களைப் பரப்பி, ஏமாற்றத்தையுண்டாக்க வேண்டாமென்பதை அன்புடன் அறிவிக்க விரும்புகிறார்.

'பக்தூனிஸ்தானுக்கு பல நூற்றுண்டு வரலாற்றுச் சான்று'

'பல நூற்றுண்டாக, அது பிறரால் ஆளப்பட்டது கிடையாது'

'பரம்பரை உரிமையை விட்டுக் கொடுத்து பாகிஸ்தானுடன் உடன்பட ஒப்போம்'

பக்தூனியர் தலைவர் கான் காஜி கபூலி முழக்கம்

பம்பாய், நவ. 18—

"கடந்த பல நூற்றுண்டுகளாக, பக்தூன்களின் பூமி வேறெவராலும் ஆளப்பட்டது கிடையாது;

"அந்தச் சரித்திரம் தொடர்ந்து நிலைக்கப் பாடுபடுவோம்;

"பக்தூனிஸ்தான் விடுதலை, பக்தூனியர்களுக்கு வாழ்வதா சாவதா என்ற பிரச்சினை ஆகும்;

"பக்தூனிஸ்தான் சுதந்திரம் பற்றி, பாகிஸ்தானுடன் எந்தவிதமான சமரசம் காணவும் முடியாது;

"பக்தூனிஸ்தானை, பாகிஸ்தானின் ஒரு பகுதியாக வைத்துக்கொள்ள நினைக்கும் பாகிஸ்தானின் ஏகாதிபத்தியப் போக்கை பக்தூன்கள் வன்மையாகக் கண்டிக்கின்றனர்."

—இவ்வாறு, பக்தூன் ஜீர்கை—ஹிர்த் நிறுவனத்தின் பொதுச்செயலாளரும், பக்தூனியர்களின் தலைவருமான கான் காஜி கபூலி குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார் :—

"பக்தூனிஸ்தான் விடுதலை பெறுகிற வரை, ஆப்கனிஸ்தான் கூட, பாகிஸ்தானுடன் நட்புறவு கொள்ளாது.

"பாகிஸ்தான் அரசாங்கத்தினர் வேண்டுமானால், பக்தூனியரிடையே பக்தூனிஸ்தான் கோரிக்கை பற்றி ஒரு வாக்கெடுப்பு நடத்திப் பார்க்கட்டும்; அப்போது தெரியும், பக்தூனியர்கள் என்ன கேட்கிறார்கள் என்பது! அப்படி எடுக்கப்படும் வாக்கெடுப்பின் முடிவு, 'பாகிஸ்தானுடன் சேர்ந்துதான் பக்தூனியர்கள் வாழப் பிரியப்படுகின்றனர்,' என்ற கான் சகோதரர்களின் கூற்றைப் பொய்யாக்கும்!

"மத்திய அரசாங்கத்தில் உபயோகமற்ற ஒரு மந்திரி பதவி வேண்டுமென்பதற்காக அல்ல—பக்தூனியர்கள் தியாகங்கள் பல புரிந்து வருவது; ஆனால், பக்தூனிஸ்தானின் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்குமாகத்தான் அவர்கள் தியாகம் பல புரிந்து வருகின்றனர்.

"டாக்டர் கான் சாகிப் பாகிஸ்தானில் இப்போது அமைந்துள்ள பொம்மை மந்திரி சபையில் சேர்க்கப்பட்டிருந்தபோதிலும், இதுவரை எந்த இலட்சியத்திற்காக பக்தூனியர்களுடன் சேர்ந்து நான் பணியாற்றினேனே, அந்த இலட்சியமான பக்தூனிஸ்தான் விடுதலையை உறுதியுடன் முன்னின்று நிறைவேற்றவே பாடுபடுவேன்; என் உயிரையும் பணயம் வைப்பேன்."

1951 முதல் 1954 வரை மொத்தம் சுமார் 316 லட்சம் ஏகரா நிலம் திருத்திப் பண்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டப்படிக்கான லட்சிய அளவு 14 லட்சம் ஏகரா ஆகும்.

முன்னாள் பார்ப்பனர்களின் குட்டு அம்பலம்

அபேரி மேனன் நூலை ஆதரித்து அமெரிக்க இதழில் கட்டுரை

அது கண்டு 'இந்து' நிருபரின் ஆத்திரமும்-அச்சுறுத்தலும்!

அமெரிக்க அதிகாரியின் தஞ்சம்!

"பழங்காலத்து இந்தியப் பார்ப்பனர்கள், சாதாரண மக்களுக்கு உரித்தான அறிவியல் பணியைக் களவாடிக் கொண்டனர்.

"ஆதிக்கத்தில் தாங்களே நிலைத்திருக்கும் வகையில் வரலாற்றையும் இலக்கியத்தையும் ஒவ்வொரு காலத்திலும் அவர்கள் திருத்தி எழுதிக்கொண்டனர்."

—இவ்வாறு, அபேரி மேனன் என்பவர், தான் எழுதிய இராமாயணம் 'திரும்பச் சொல்லப்படுகிறது' என்ற நூலில், அக்கால இந்தியப் பார்ப்பனர்களின் கள்ளத்தனத்தையும் ஆதிக்க வெறியையும் அம்பலப்படுத்தி இருக்கிறார்.

நவம்பர் 9-ந் தேதி வெளிவந்த தமது வெளியீட்டில், கொழும்பு அமெரிக்கத் தூதுவராலயம் இந்நூலைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. இலங்கை ஆங்கில தினசரியான 'கார்டியன்' மேற்படி கட்டுரையை அப்படியே வெளியிட்டுள்ளது.

அந்தக் காலத்துப் பார்ப்பனர்களின் கொடுமையை வெட்ட வெளிச்சமாக்கும் ஒரு நூலுக்கு, அமெரிக்க வெளியீடு ஆதரித்து விளம்பரம் தருவது, கொழும்பில் உள்ள 'இந்து' நிருபருக்கும் எரிச்சலைக் கொடுத்துவிட்டது. சென்னை 'இந்து' ஆசிரியர் குழாத்திற்கும், அதனால் ஆத்திரம் மூண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

கொழும்பு அமெரிக்கத் தூதுவராலய பொது விவகார அதிகாரியான எல். ஏ. ஸ்கொயர்ஸ் என்பவரை, 'இந்து' நிருபர் *சந்தித்து அச்சுறுத்தி இருக்கிறார்.*

அதாவது, தென்னிந்தியாவில் திராவிடர் கழகம் ஆற்றும் பணியை சிலோனில் அமெரிக்கத் தூதுவராலயம் புரிகிறதோ என எண்ணம் தோன்றுகிறது எனவும், பெரிய அளவில் ஆத்திரமூட்டக் கூடிய இக்கட்டுரையினுல் இந்தியாவிலும் சிலோனிலும் ஏற்படக்கூடிய பயங்கரமான விளைவுகளையும் எடுத்துக்காட்டி எச்சரித்தார், 'இந்து' நிருபர்.

அந்த அமெரிக்க அதிகாரி, 'இந்து' நிருபரின் மிரட்டலுக்கு நடுநடுங்கிப்போய், மேற்படி சம்பவத்திற்காக வருந்தியும் மன்னிப்புக் கோரியும் தமது அடுத்த வெளியீட்டில் அக்கட்டுரையை வாபஸ் பெற்றும் சேர்ந்த தவறுதலுக்காக வெளிப்படையாகத் தனது மன்னிப்பை வெளியிட்டும்விடுவதாக நிருபருக்குக் கடிதம் ஒன்று எழுதியுள்ளாராம்!

அமெரிக்க பிரச்சார ஏட்டிலிருந்து அக்கட்டுரையை 'கார்டியன்' வெளியிட்டதற்காகவும், அமெரிக்க அதிகாரி மன்னிப்புக் கேட்டுக்கொண்டாராம்!

மத்திய அரசாங்கம் தரும் மானியம்

ஒரு கோடி ரூபாயை சென்னை - அரசாங்கம் பயன்படுத்தவில்லை?

இந்தியப் பேரரசு, சென்னை மாநிலத்திற்குத் தந்த மானியத்தில் 93,27,273 - ரூபாயை சென்னை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளாமலேயே இருந்துவிட்டிருக்கிறது.

1950—51-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை உபயோகிக்கப்படாமல் காலாவதியாகிவிட்ட மானியத் தொகையாகும், இது! இதில் பெரும் பகுதி உணவு உற்பத்திப் பெருக்க இயக்கத்திற்காகத் தரப்பட்டது.

இன்னும் ஒரு பகுதி, குறிப்பிட்ட பிரதேசங்களில் தீவிரமாக கல்வி அபிவிருத்தி செய்தலுக்காக*வும், பொதுவாக 'மாநிலத்தில் கல்வி அபிவிருத்திக்காகவும் தரப்பட்டதாகும். இந்த மானியத்தைக் கூட மாநில அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளாமற் போய்விட்டிருக்கிறது. இத்தகவலை, நிதி மந்திரி தேஷ்முக் திரு அனந்தன் நம்பியாரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில் வெளியிட்டார்.*

இந்தோனேஷியாவில் நில நடுக்கம்

இந்தோனேஷியாவில் உள்ள பீயா எனும் நகரத்தில் ஏற்பட்ட கடுமையானதொரு நில நடுக்கத்தினுல் சுமார் 2 லட்சம் பவுன் பெறுமான சொத்துக்கள் சேதமடைந்துள்ளனவாம்.

சேதமடைந்த பல மாளிகைகளுள், சுல்தானின் அரண்மனையும் ஒன்றும்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 20—11—1954 சனி

கைத்தறிக்கு பாதுகாப்பு

திராவிடத்தின் பெருமைக்குரிய தொழில்களில் கைத்தறி நெசவு மிக முக்கியமானது.

அந்தத் தொழில், கடந்த சமீப காலத்தில், வட நாட்டில் வானளாவ வளர்ந்து வரும் ஆலைகளின் துணி உற்பத்தியோடு போட்டியிட முடியாத வாறு, சிறிது சிறிதாக நசுக்கப்பட்டு வருவது கண்கூடு.

கைத்தறித் தொழில், வட நாட்டு ஆலைத் துணி உற்பத்தியின் 'ராட்சச'ப் போட்டியால் சிதைக்கப்பட்டு வருவதின் விளைவை, வாழ்ந்தவர் விழ்ந்த நிலையில் வாழ வகையற்று, பிச்சைக்காரர்களாய், சென்ற ஆண்டில், சென்னையிலும், மற்றும் பல நகரங்களிலும் உலவிக் கொண்டிருந்த கைத்தறி நெசவாளர்களைக் கண்ணுற்றோர் நன்கு அறிவர்.

நெசவாளருக்கு ஏற்பட்ட இந்த அவல நிலையைத் துடைக்க திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொண்ட அரும் பணிகள் அனைவரும் அறிந்ததே!

1952-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் தஞ்சையில் கூடிய தி. மு. கழகப் பொதுக் குழு, கைத்தறி நெசவுத் தொழில் நசுக்கப்பட்டு வருவதின் விளைவாக, திராவிடச் சமுதாயத்தின் ஒரு பகுதியினர் 'பிச்சைக்காரர்'களாய் மாறி வருவதை அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டி, கைத்தறி நெசவுத் தொழில் தழைக்க சிறந்ததோர் வழியையும் வகுத்துக் காட்டியது.

அன்று ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்த ஆச்சாரியார், "கரைபோட்ட வேட்டியும், சேலையும் நெய்வதை கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும்," என்று சட்டசபையில் நிறைவேற்றிய தீர்மானத்தை ஆதரித்ததுடன், "36 அங்குலத்திற்கு மேற்பட்ட அகலமுடைய எந்த ரகத் துணியையும் ஆலைகள் நெய்யக்கூடாது;" என்றும், தி. மு. கழகப் பொதுக் குழு திட்டவட்டமாகத் தீர்மானம் நிறைவேற்றியது.

ஆச்சாரியார் நிறைவேற்றிய தீர்மானத்தை வடநாட்டிலிருக்கும் அவரது எஜமானர்கள், இன்றுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த எஜமானர்கள்தான் வடநாட்டு ஆலை அரசர்களின் ஆப்த நண்பர்களாக, ஆருயிர்த் தோழர்களாக—ஏன் உறவினர்களாகவே இருக்கிறார்களே! அவர்கள் எப்படி இத்தீர்மானத்தை ஏற்றுக் கொள்வர்?

இன்று இந்தியப் பேரரசின் தலைவரான டாக்டர் இராசேந்திர பிரசாத்,

"கிராமத் தொழில்களுக்கென ஒதுக்கி வைக்க வேண்டிய சில துறைகளை நாம் கணக்கிலெடுக்க வேண்டும்; அந்தத் துறைத் தொழில்களுடன், இதர இயந்திர உற்பத்தித் தொழில்களும், வெளிநாட்டு இறக்குமதியும் போட்டியிடாவண்ணமிருக்க வேண்டும்;

"அத்தகைய துறைகள், கதர், கைத்தறி தொழில்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டால் கைத்தறிக்கும், ஆலைத் துணிக்கும் இடையில் ஏற்படும் போட்டியினைத் தவிர்க்க முடியும்;

"இந்தச் சலுகை, இதர குடிசைத் தொழில்களுக்கும் தரப்பட வேண்டும்; ஏனெனில், அப்போதுதான் ஒதுக்கி வைக்கப்படுகிற துறைகளில், பெரிய தொழில்கள் புகாமலிருக்கும்,"

என்று, அகில இந்திய கதர், கைத்தறி போர்டு மாநாடொன்றைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

டாக்டர் பிரசாத், கைத்தறித் தொழில் போன்ற குடிசைத் தொழில்கள் காப்பாற்றப்படுவதற்காகக் கூறியுள்ள இந்த யோசனையை நாம் ஒரு திருத்தத்துடன் வரவேற்கிறோம். கதர் உற்பத்திக்கும் அவர் சலுகை தர வேண்டுமென 'காந்தியவாதம்' புரிந்திருப்பதை நம்மால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. எனவே அதைக் கைவிட வேண்டுமென்பதே நம் திருத்தம்.

நான்கு முழம் கைத்தறித் துணியோ அல்லது ஆலைத் துணியோ நெய்வதற்குத் தேவையான பஞ்சைக் கொண்டு, ஒரு முழம் கதர் தான் நெய்ய முடியும். இங்கு உற்பத்தியாகும் பஞ்சை, இந்த வகையில் பாழாக்கிக் கொண்டிருப்பதினால், எத்தனை பொருள் நஷ்டத்தை நாடு ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை, மக்கள் உணர வேண்டும்; நாட்டிற்கு இச்சீரழிவு முறை அவசியந்தானா என்பதையும் சிந்திக்க வேண்டும்.

மேலும், கதர் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கிடைக்கக்கூடிய மிகச் சொற்பமான ஊதியமும்கூட, அவர்கள் உயிர் உடலுடன் ஒட்டிக் கொண்டிருப்பதற்கு மட்டும் உதவலாமே தவிர, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த கொஞ்சமேனும் உதவாது என்பது வெள்ளிடைமலை; எனவே, கதர் உற்பத்திக்கு டாக்டர் பிரசாத் கோருகிற சலுகைகள் தேவையற்றன என்றே கூறுகிறோம்.

கைத்தறி நெசவுத் தொழிலைப் பொறுத்தமட்டில், ஆலை உற்பத்தியின் போட்டியைத் தவிர்க்க, அவர் கூறியுள்ளபடி, "நெசவுத் தொழிலின் சில இனங்களை—அதாவது, சில குறிப்பிட்ட ரகத் துணிகளை, கரைபோட்ட வேட்டி, சேலை முதலியவைகளையும், 36 அங்குல அகலத்திற்கு மேற்பட்ட துணிகளையும், கைத்தறிகளல்லாது ஆலைகள் உற்பத்தி செய்யக்கூடாது," என்று சட்டம் இயற்ற வேண்டும்.

அப்படிப்பட்ட பாதுகாப்புத் தரப்பட்டால்தான், கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கும்பல இலட்சம் மக்கள் ஓரளவேனும் தங்கள் தொழிலை நம்பிவாழ இயலும்.

மேலும் டாக்டர் பிரசாத், "பெரிய பெரிய தொழில்களுக்கெல்லாம் சர்க்கார் கோடிக் கணக்கான ரூபாய் உதவிப் பணமாகத் தருகிறது; உதாரணமாக, உள்நாட்டு சர்க்கரை உற்பத்தித் தொழிலுக்கு வெளிநாட்டு சர்க்கரை இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதித்தும், தொழில் வளரும் பொருட்டும் ஆண்டுதோறும் சர்க்கார், பலகோடி ரூபாய் உதவி தந்தும் வந்துள்ளது; அதே போன்று, எஃகு உற்பத்தித் தொழிலுக்கும் சர்க்கார் உதவியளிக்கிறது; அப்படி இருக்கும்போது, பல லட்சம் பேருக்கு வேலையும் வாழ்வும் தருகிற கிராமத் தொழில்களுக்கும் சர்க்கார் அதே அளவு பண உதவி ஏன் தரக்கூடாது என்பதற்கான காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

டாக்டர் பிரசாத் கூறிய பிறகாவது இந்தியப் பேரரசு, கைத்தறி நெசவுத் தொழில், ஆலைகளின் போட்டியால் சீரழிந்து போகாமல் பாதுகாப்புத் தர முன்வருவதுடன், அவர் எடுத்துக் காட்டியிருப்பது போன்று கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களை வாழ்விக்கவும், அத்தொழில் வளரவுமான திட்டங்களைத் தீட்டி, அத்திட்டங்களை நிறைவேற்றப் பண உதவியும் செய்ய முன்வர வேண்டுமெனக் கோருகிறோம்.

கைத்தறித் தொழில் அபிவிருத்தி

மேலும் பண உதவி

இந்திய சர்க்கார், பல்வேறு மாநிலங்களிலுள்ள கைத்தறித் தொழில் அபிவிருத்திக்காக மேலும் மானியத் தொகைகளும், கடன் தொகைகளும் அனுமதித்துள்ளது.

'ஏ' 'பி' பிரிவு மாநிலங்களில் உள்ள சமூக அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களில், கைத்தறித் துணிகள் கண்காட்சி சம்பந்தமாக மாநில சர்க்கார்கள் செலவழித்துள்ள தொகைகளை ஈடு செய்வதற்காக, அகில இந்திய கைத்தறி குழுவுக்கு ரூ. 85,000 வழங்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் உள்ள கைத்தறி விற்பனை நிலையத்துக்காக, சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் வாங்கியுள்ள வண்டியின் செலவை ஈடுகட்ட, அக்குழுவுக்கு மேலும் ரூ. 6,789 அளிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய பாரதத்துக்கு மானியமாக ரூ 1,45,105-மும்; சௌராஷ்டிரத்துக்கு மானியம் ரூ. 65,266-ம், கடனாக ரூ. 20,750-ம், சகாயத் தொகையாக ரூ. 16,500-மும், விந்திய பிரதேசத்துக்கு மானியமாக ரூ 14,500-மும்; மணிப்பூருக்குக் கடனாக ரூ.8,960-மும்; மே.வங்கத்துக்கு மானியமாக ரூ. 5,500-ம்; டில்லி மாநிலத்துக்கு மானியமாக ரூ. 5,210-ம் வழங்கப்பட்டுள்ளது.

மதுவகைகள் சட்டம்

பெல்ஜியத்தில்தளர்த்தப்படுகிறது

இப்போது பெல்ஜியத்தில் அமுல் செய்யப்படும் மது விலக்கு பற்றிய சாதாரண சட்டங்களை நீக்கிவிட மசோதா ஒன்றுகொண்டு வரப்பட்டிருக்கிறது.

இப்போது ஓட்டல்களிலும், சிறு உணவுக் கடைகளிலும் மதுபானங்களை விற்பனை செய்வது தடை செய்யப்பட்டிருக்கிறது. இத்தடையை நீக்க வேண்டுமென்று பாராளுமன்றத்தில் 24 லிபரல் கட்சி உறுப்பினர்கள் மசோதா ஒன்றைக் கொண்டு வந்துள்ளனர்.

'பாகிஸ்தான் பிரிட்டனின் குடியேற்ற நாடு அல்ல'

பதவி நீங்கிய நீதிபதி வாக்குமூலம்

லண்டன், நவ. 17—

"நான், இந்தியாவில் 18 ஆண்டுகாலம் நீதிபதியாகப் பணியாற்றி இருக்கிறேன். பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் பாகிஸ்தான் ஒரு உறுப்பாக இருந்தபோதிலும், பிரிட்டனின் குடியேற்ற நாடாக இப்பொழுது, அது, இல்லை.

"1949-ம் ஆண்டுவரை பிரிட்டிஷ் இராணிக்குக் கடமைப்பட்டிருந்தது; ஆனால், அதன் பிறகு பாகிஸ்தான் அந்நிலையை மாற்றிக்கொண்டது."

—இவ்வாறு, ஏ. ஜி. பி. புலான் என்ற முன்னாள் நீதிபதி, பர்மிங்காம் நீதிமன்றத்தின் முன் சாட்சியம் கொடுத்தார்.

பர்மிங்காம் நகரில் வசித்துவரும் ஜான் உல்லா என்ற பாகிஸ்தானைச் சேர்ந்த ஒருவரை, தேசிய ஊழிய சட்டத்தின் கீழ் பிரிட்டிஷ் சர்க்கார் இராணுவப் பயிற்சிக்கு அழைத்தது.

அவ்வாறு அழைக்கப்படுபவர், பயிற்சி பெற முற்படும் முன்னதாக மருத்துவப் பரிசோதனைக்குத் தம்மை ஒப்படைக்க வேண்டும்: அதற்காக அனுப்பப்பட்ட சர்க்கார் கட்டளைக்குக் கீழ்ப்படிய ஜான் உல்லா மறுத்துவிட்டார். அதன் விளைவாக, அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

அந்த வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவரின் சார்பில் சாட்சியங் கூறிய முன்னாள் நீதிபதி புலான், தனது சாட்சியத்தில் மேலே குறிப்பிட்டுள்ளவாறு பாகிஸ்தானுக்கும்—பிரிட்டனுக்கும் இன்றுள்ள அரசியல் தொடர்பை விளக்கினார்.

தான் இப்பொழுதும் ஒரு பாகிஸ்தான் குடிமகன்தான் என்றும், தற்காலிகமாக பிரிட்டனில் இருப்பதாகவும், எனவே தேசிய ஊழிய சட்டம் பாகிஸ்தான் குடிமக்களைக் கட்டுப்படுத்தாது என்றும், ஜான் உல்லா தனது போக்கிற்கு சமாதானம் கூறுகிறார்.

வழக்கு டிசம்பர் 8-ந் தேதிக்குத் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

அபிவிருத்தித் திட்டங்களால் வேலையில்லாத் திண்டாட்டம் குறையவில்லை

வேலை தேடுவோர் தொகை அதிகமாகிறது

இந்தியாவின் முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகிறது என்று திட்டக் கமிஷன் அறிவிக்கும் போது, 'வேலை தேவை,' என்று வேலை தேடித்தரும் நிலையங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யும் மக்களின் தொகை ஆண்டுதோறும் அதிகமாகிக்கொண்டே இருக்கின்றது.

கிளார்க்குகள் போன்ற வேலைகளைத் தேடுவோரின் எண்ணிக்கை அதிகமாகிறதாம்.

வேலையில்லாத் திண்டாட்டத்தில், இது மிகவும் வெறுக்கத்தக்க நிலை என்று கூறப்படுகிறது.

பல துறைகளில், வேலைகளுக்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ள போதிலும், வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்துக் கொண்டே போவதற்குக் காரணம் வேலை தேடுவோரின் தொகை, அதிகமாவதுதான் என்று கூறப்படுகிறது.

மக்கள் பெருக்கத்துக்கு ஏற்றவாறு வேலை செய்யத் தகுதி பெறும் நபர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் முறையில் போதுமான புதிய வேலைகள் ஏற்படுத்தப்படவில்லை என்று கூறலாம்.

சர்க்காரால் சமுதாயநலத் திட்டங்களில் செலவிடப்படுகிற பணமெல்லாம், கிராமங்களிலேயே பெரும்பாலும் செலவழிக்கப்படுவதால், போதுமான வேலையற்று அரைகுறையாக வேலை செய்வோரின் துயரத்தைப் போக்கவே இவை பயன்படுகின்றன என்றும், வேலையில்லாது தவிக்கும் மக்களின் துயரைப் போக்க இவை பயன்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவுடன் கூட்டுப் பாதுகாப்பு

மீர்சா விரும்புகிறார்

"இந்தியாவும் — பாகிஸ்தானும் கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாடு செய்துகொள்ளலாம்,"

என்று, பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் மீர்சா குறிப்பிட்டிருக்கிறார்.

ஆப்கனிஸ்தானும் — பாகிஸ்தானும் கூட்டுப் பாதுகாப்பு ஒன்றைச் செய்து கொள்ளலாம் என்று அவர் கூறியதுபற்றி இந்தியாவில் உள்ள ஆப்கன் தூதுவர் அறிக்கை ஒன்று வெளியிட்டார் அல்லவா? அதுபற்றி மீர்சாவிடம் கேட்டபோது, அவர், "இந்தியாவுடனும் அதுபோன்ற பாதுகாப்பு ஏற்பாடுகளைத்தான் விரும்புவதாக"க் கூறினார்.

கிழக்குப் பாகிஸ்தானில் புதிய தேர்தல்கள் எதும் நடைபெறாது என்றும், நிலைமையைத் தாங்கள் கவனித்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வசதி கிடைத்தது!

இந்திய ரயில்வேக்களின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக, 1954 நவம்பர் 15-ந் தேதி திங்கட்கிழமையிலிருந்து, மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளுக்கு இரவில் தூங்குவதற்கான இடவசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தூங்குமிட வசதிக்காக, ஒரு இரவுக்கு அல்லது அதன்பகுதிக்கு, வழக்கமான கட்டணத்துடன் 3 ரூபாய் அதிகப்படிக் கட்டணமாக வசூலிக்கப்படும்.

ரயில்வே பாஸ் பெற்று பிரயாணம் செய்பவர்களுக்கு தற்போதைக்கு மூன்றாவது வகுப்பு வண்டிகளில் தூங்குமிட வசதி கிடைக்காது.

வேலையில்லாத் திண்டாட்டம்

புள்ளி விவரம் காட்டும் உண்மை

வேலை தேடித்தரும் நிலையங்களில் 1954 செப்டம்பர் மாதத்தில், மொத்தம் 1,22,312 பேர் புதிதாகப் பதிவு செய்துகொண்டனர்; முந்திய மாதத்தில் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 1,27,734 ஆகும். இந்த மாதத்தில் மொத்தம் 14,357 பேர் வேலையிலமர்த்தப்பட்டனர். முந்திய மாதம் வேலையிலமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 12,062 ஆகும். செப்டம்பர் மாத இறுதியில் வேலை தேடிக்கொள்ள உதவி நாடியவர்களின் மொத்த எண்ணிக்கை 5,90,533. இந்த எண்ணிக்கை முந்திய மாதத்தைக் காட்டிலும் 8,822 குறைவாகும். நாட்டில் வேலையளிப்பு நிலவரத்தில், மொத்தத்தில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி எதுவும் காணப்படவில்லையென்று அறிக்கைகளிலிருந்து தெரியவருகிறது.

இலங்கைக் 'குடி உரிமை' தேவையில்லை!

1000 பேர் மனுக்களைத் திரும்பப் பெற்றனர்

இலங்கையின் குடி உரிமை கோரி மனுச் செய்துகொண்டிருப்பவர்களில் 1,000 பேர் தங்கள் மனுக்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர் என்று தெரிகிறது.

நேரு—கொத்தலாவலை ஒப்பந்தத்திற்குப் பின்னர், இவர்கள், தங்கள் மனுக்களை திரும்பப் பெற்றனராம்.

இலங்கையின் குடிமகனாக வேண்டுமென்று ஒரு முறை மனுச் செய்து கொண்டவர்கள், இந்தியக் குடி உரிமை பெறமுடியாது என்று முன்னர் இருந்த ஏற்பாட்டை புதிய ஒப்பந்தம் மாற்றிவிட்டதால், பெரும்பான்மையினர் இந்தியக் குடிஉரிமை பெறும் பொருட்டு, இலங்கை சர்க்காருக்குக் கொடுத்திருந்த மனுக்களைத் திரும்பப் பெறுகிறார்களாம்.

இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லும் பொருட்டு, 12 பேர், இலங்கைக் குடிஉரிமை தேவையில்லை என்று கூறிவிட்டிருக்கிறார்களாம். இச்செய்தியை இலங்கை அதிகாரி ஒருவர் கூறினாரெனத் தெரிகிறது.

ஆனால், இலங்கை இந்தியத் தூதுவராலயச் செய்திகளின்படி, ஒரே ஒருவர்தான் இந்தியக் குடிஉரிமை பெறும் பொருட்டு, இலங்கை சர்க்காரிடமிருந்து, இலங்கைக் குடிஉரிமைக்கான மனுவைத் திரும்பப் பெற்றிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

இந்தியர்களுக்கு அடையாள சீட்டுகள் வழங்குதல்

ஏற்பாடுகள் முடிவடைந்துவிட்டன

இந்தியாவுக்குப் போய் வருவதற்கான 'அடையாளச் சீட்டு'களை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் அனைத்தையும் இந்தியத் தூதுவராலயம் செய்து முடித்துவிட்டதாக, கொழும்புவில் உள்ள தற்காலிக இந்தியத் தூதுவர் ஆர். எப். இசார் கூறினர்.

இலங்கையில் வாழும் இந்தியக் குடிகளுக்கு இந்த 'அடையாளச் சீட்டு'கள் வழங்கப்படும் என்று தெரிகிறது.

அண்மையில் நடைபெற்ற நேரு—கொத்தலாவலை ஒப்பந்தத்தின்படி இரண்டு சர்க்கார்களும், இரு நாடுகளுக்கிடையே பிரயாணம் செய்ய அடையாளச் சீட்டுகள் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது

இந்த அடையாளச் சீட்டுகள் மூன்று மாதத்திற்குச் செல்லுபடியாகும் என்று தெரிகிறது.

ஷேக் அப்துல்லா

காஷ்மீரின் முன்னாள் பிரதம மந்திரியும் இப்போது சிறைவாசம் செய்பவருமான ஷேக்அப்துல்லா, காஷ்மீர் அரசியல் நிர்ணய சபையிலிருந்து இந்திய ராஜ்யங்கள் சபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டிய ஒரு பிரதிநிதிக்கான உபதேர்தலில் தாம் ஓட்டளிக்க முடியாதெனக் கூறிவிட்டதாக 'டான்' என்ற இதழில் செய்தி வெளியாகியுள்ளது.

"நான் இந்த 'அரசியல் நிர்ணய சபையை' அங்கீகரிக்கவில்லை; எனவே, எனது ஓட்டளிக்கும் உரிமை பற்றி கவலை கொள்ளத் தேவை இல்லை," என்று ஷேக்-அப்துல்லா தன்னிடம் வாக்குப் பதிவு செய்ய வந்த விசேட அதிகாரியிடம் கூறியதாகத் தெரிகிறது.

'அரசியல் நிர்ணய சபை' அங்கத்தினர்களில் இன்னும் மூவரும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பண்டித திரிக்லோசன் டட் என்ற தேசிய மாநாட்டுக் கட்சியைச் சேர்ந்தவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்தியாவிற்கு வரும் இலங்கை வாழ் இந்தியர், மூன்று மாத காலம் இந்தியாவில் தங்கலாம்.

இந்திய அரசியல் சட்டத்தின் 8-வது பிரிவின்படி, இந்தியக் குடி உரிமைக்கு மனுப் போட்டுள்ளவர்களுக்குத்தான் இந்த அடையாளச் சீட்டுக்கள் வழங்கப்படும் என்று தெரிகிறது.

இதுபோல், இலங்கையராக இலங்கைக் குடிஉரிமைப் பதிவு அதிகாரியிடம் மனுச் செய்து கொண்டுள்ள இந்தியர்களுக்கு; இந்தியாவிற்குப் போய்வர அடையாளச் சீட்டுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை இலங்கை சர்க்கார் செய்து முடித்து விட்டதாம்.

இந்திய சர்க்காரில் 22 பெண் அதிகாரிகள்

"அகில இந்திய சர்க்கார் அலுவலகங்களில் 22 பெண்கள் இருக்கின்றனர். அவர்களில் 8 பேர் மணமானவர்கள்; அவர்களில் ஐந்து பேருக்குக் குழந்தைகளும் உண்டு,"

என்று, உதவி உள்நாட்டு மந்திரி, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில் குறிப்பிட்டார்.

இந்திய நிர்வாக இலாகாவில் ஏழு பெண் அதிகாரிகளும், 5 பேர்கள் வெளிநாட்டு இலாகாவிலும், 10 நபர்கள் மத்திய 'செக்ரடேரியட்'டிலும் ஆக 22 பெண்கள் பணிபுரிவதாக அவர் கூறியிருக்கிறார்.

மேலும் அவர், 'போலீஸ் இலாகாவில் எந்தப் பெண்ணும் அதிகாரியாக இருக்கவில்லை,' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மெர்காராவில் - மதுவிலக்கு!

விற்பனை லைசென்சுகள் ரத்து!

குடகு சர்க்கார் மதுபானக் கடைகளுக்கு கொடுத்துள்ள லைசென்சுகளை ரத்து செய்வதென்று தீர்மானித்திருக்கிறது. இந்த முடிவு வருகிற டிசம்பர் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வருகிறது.

'கிளப்'புகளில் மதுபான விற்பனையை சர்க்கார் கூர்ந்து கவனித்து வந்ததாம்.

இதன் மூலம் சர்க்காரின் மதுபானச் சட்ட விதிகள் மீறப்படுவதையும், தேவைக்கு அதிகமாக ஒரே நபருக்கு மதுபானம் அளிக்கப்படுவதையும், சர்க்கார் கண்டனர் என்று தெரிகிறது.

தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மதுபான 'பர்மிட்டு'களை சர்க்காரிடம் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று உத்திரவிடப்படுகிறது. இவை, மீண்டும் மனுவின்பேரில் ஒவ்வொருவரின் தகுதிக்கு ஏற்றவாறு புதுப்பிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

ஒரே மனிதருக்கு, ஒரு நாளில், 72 'பெக்'குகள் விஸ்கி விற்கப்பட்டதாம். ஒரு மாதத்தில், வேறு ஒரு நபருக்கு 19 பாட்டில்கள் விஸ்கி விற்கப்பட்டதாம்.

மற்றுமொரு நபர், ஒரே நாளில், 133 'பெக்கு'கள் விஸ்கியும், 'ஜின்'னும் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

ஒரே நாளில், ஒரு நபர், நாலரை பாட்டில் விஸ்கி வாங்கிச் சென்றிருக்கிறார் என்று தெரிகிறது.

பர்மிட் வைத்திருப்போர், பர்மிட் மூலம் கிடைக்கும் மதுவுடன், 'கிளப்'புகளில் வேறு தனியாகப் பெறுகிறார்கள் என்று தெரிகிறது.

சில நாட்களுக்கு முன்னர் மெர்காரா நகரசபை ஒரு தீர்மானம் மூலம் மதுபான விற்பனை லைசென்சுகளை ரத்து செய்ய வேண்டுமென்று கோரியது.

பர்மா பிரதமர் அமெரிக்கா செல்வார்

அழைப்பை ஏற்றுக்கொண்டார்

பர்மியப் பிரதமர் யூ—நு, அமெரிக்க சர்க்காரின் அழைப்பின் பேரில் 1955-ம் ஆண்டு மே திங்களில் அமெரிக்கா செல்வார் என்று தெரிகிறது. இவர் ஆறு வாரங்கள் அமெரிக்காவில் தங்குவார் என்று கூறப்படுகிறது.

இத்திங்கள் 29-ந் தேதியன்று யூ - நு பீகிங் செல்கிறார். போகும் வழியில், அவர், ஹோ - சி - மினைச் சந்தித்துப் பேசுவார் என்று தெரிகிறது.

அபிரகச் சுரங்கம்

பர்மாவிலுள்ள ஷான்ராஜ்யங்களில் அபிரகம் ஏராளமாகக் கிடைக்கக்கூடிய சுரங்கங்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

கனிப் பொருள் உற்பத்திக்கான அபிவிருத்திக் கார்ப்பரேஷன், இந்த அபிரகச் சுரங்கங்களிலிருந்து ஏற்கனவே சுமார் 2,000 டன் எடையுள்ள அபிரகம் தோண்டி எடுக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு விட்டது என்று அறிவித்திருக்கிறது.

இந்த சுரங்கங்கள் நாட்டிற்கு நல்ல வருமானத்தைத் தரக்கூடியதெனக் கருதப்படுகின்றனவாம்.

பத்திராதிபரும் அரசியல் வாதியும்!

அரசியலைக் காட்டிலும் பத்திரிகைத் துறை தனக்கு அதிக மதிப்பையும் மகிழ்ச்சியையும் தருவதாக, சிந்து மாநில புதிய மந்திரியான பீர்அலிமுகம்மது ரஷீது குறிப்பிட்டிருக்கிறார்.

அவர், 'சிந்து அப்சர்வர்' என்ற பத்திரிகையின் ஆசிரியராயிருந்தார். இப்போது குஹ்ரோ தலைமையில் உள்ள புதிய சிந்து மந்திரி சபையில் ரெவினியூ மந்திரியாயிருக்கிறார்.

பத்திரிகை நிருபர்களிடை பேசுகையில் "ஒரு அரசியல் வாதியாவதற்காக, பத்திரிகையாளராயிருப்பதை ஏன் விட்டு விட்டீர்கள்" என்று கேட்கப்பட்ட போது, "கடமை என்னை நிர்ப்பந்தித்ததின் காரணமாகவே மந்திரியானேன்!" என்று கூறியிருக்கிறார்.

பிரான்ஸ் நாட்டில் பத்திரிகைகளின் நிலை

"பிரான்ஸ் நாட்டில் பத்திரிகைத் தொழில் இலாபகரமானதாகவே உள்ளது. பத்திரிகைகள் விஷயத்தில் சர்க்கார் தலையிடுவதே இல்லை; பத்திரிகைகளுக்குப் பூரண சுதந்திரம் கிடைத்திருக்கிறது;

"செய்திகளை வெளியிடும் முறையும், கொள்கையும், பத்திரிகையின் ஆசிரியர்களைப் பொறுத்த விஷயமாகும். வேறு யாருக்கும் இதுபற்றி எவ்வித அதிகாரமும் கிடையாது,"

என்று ஜார்ஜ்ஸ்ரேயர் என்ற பிரெஞ்சு பத்திராதிபர், புதுவை காரைக்கால் பகுதிகள் இந்தியாவுடன் இணைகிற நிலைகளைக் கண்டு செய்தி திரட்டிச் செல்ல வந்திருந்தவர், சென்னைக்கு வந்தபோது குறிப்பிட்டார்.

ஆதாரக் கல்வி

இந்துஸ்தானி தலிமி சங் தலைவரான காகா சாகேப் கலேல்கார், அகில இந்திய ஆதாரக் கல்வி மாநாட்டிற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில், "ஆதாரக் கல்வியின் நாயகர்கள் எல்லாம் ஒரு ஐக்கிய முன்னணியில் தங்கள் முயற்சிகளை ஒன்றுகூட்டி, நாட்டில் நிலவும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவக் கூடிய ஆதாரக் கல்விப் பயிற்சியை பள்ளிகளில் புகுத்துமாறு அரசாங்கத்தைக் கோர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறாராம்.

மலான் இன வெறியை மிஞ்சும் புதிய கட்சி

தென்னாப்பிரிக்க ஐக்கிய கட்சியின் கொள்கை விளக்கம்

நீதியிலும், நேர்மையிலும் நம்பிக்கை கொண்ட ஐரோப்பியத் தலைமையில் ஐக்கியக் கட்சி நம்பிக்கைக் கொண்டிருப்பதாக அக்கட்சியின் தலைவர் ஜே. ஜி. என். ஸ்டாரஸ் கூறியுள்ளார்.

வெள்ளையர்களின் பொருளாதாரத்துடன் ஆப்பிரிக்கர்களின் பொருளாதாரம் பிணைக்கப்பட்டிருப்பதாகவும், ஆகவே, வெள்ளையர்கள்—வெள்ளையர் அல்லாதார் ஆகியோரின் நலனையொட்டி இவைகள் நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

தென் ஆப்பிரிக்காவின் முக்கிய எதிர்க் கட்சியான ஐக்கியக் கட்சி, எட்டு மாதகால ஆராய்ச்சிக்குப் பின்னர், வெள்ளையரல்லாதார் கொள்கை பற்றிய தனது கருத்தைத் திட்டமாக அறிவித்திருக்கிறது.

"நிறபேத பிரிவினையில், மலானின் கட்சி வெற்றி பெற்றுவிட்டது என்பதெல்லாம் வீண் அபத்தம்," என்று அவர் கூறுகிறார்.

"எல்லாத் துறைகளிலும் பூரண நிறபேதம் காட்டுவதும், அல்லது எல்லாத் துறைகளிலும் இரு இனத்தாருக்கும் சம உரிமை அளிப்பது என்பதும், தற்போது நிலவுகிற உண்மையான விபரங்களை அறியாத தன்மையாகும்,"

என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

தொழில்களில், தான், நிறபேதத்தை ஒத்துக்கொள்வதாகவும், ஏனென்றால், முன்னேற்றம் அடைந்துள்ள வெள்ளையர்களின் வாழ்க்கைத் தரத்தை நீடிக்க அது பயன் தருமென்றும் அவர் கூறியுள்ளார்.

தொழிற் சங்கங்களுக்கு சட்டபூர்வமான ஒப்புதல் அளிப்பதில் ஐக்கியக் கட்சிக்கு நம்பிக்கையில்லையாம்!

இக்கட்சி, வெவ்வேறு இனத்தவர்கள் தனித்தனி பகுதிகளில் குடியிருப்பதையும், சமூகத்தில் இனப் பிரிவினை தேவை என்பதையும் ஒப்புக்கொண்டிருக்கிறது.

ஐக்கியக் கட்சியாரின் புதிய கொள்கை விளக்கத்தின்படி, அது, கறுப்பர்களுக்குப் பொது வாக்குரிமை அளிக்க முன்வரவில்லையாம்; ஆனால், தென் ஆப்பிரிக்க செனேட் சபையில் இப்போதுள்ள நான்கு பிரதிநிதிகளுக்குப் பதில் ஆறு பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவார்களாம்!

ஆப்பிரிக்கர்களுக்கென்று தனித் தேர்தல் வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்பதை ஐக்கியக் கட்சி வற்புறுத்துகிறது.

அன்னியத் துருப்புகள் வெளியேற்றம்.

லாவோஸ் பிரதேசத்திலிருந்து பிரெஞ்சு, வியட்மின் ஆகிய வெளிநாட்டு அன்னிய துருப்புகள் முழுவதும் ஏற்கனவே வெளியேறிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இத்துருப்புகள் வெளியேறுவதற்கான காலவரம்பு நவ. 19 என ஜெனீவா மாநாட்டில் முடிவாகியிருந்தது.

அதிகாரிகள், இராணுவத்தினர் அடங்கிய 5,000 பேர் கொண்ட சேனையைத் தவிர, இதரவையெல்லாம் தென் வியட்நாம் பகுதிக்குச் சென்றுவிட்டதாக பிரெஞ்சு உயர்தர இராணுவ அதிகாரி கூறினர். 5,000 பேர்களை வைத்துக் கொள்ள ஜெனீவா மாநாடு அனுமதித்திருக்கிறதாம்.

வியட்மின், தனது துருப்புகள் எல்லாம் வடக்கு வியட்நாமிற்குச் சென்றுவிட்டதாக அறிவித்துள்ளது.

தலை தப்பியது!

உபகாரச் சம்பளம் போதுமான அளவு அதிகமாகத் தருவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது என்று சர்க்காரைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றை தொழிற் கட்சியினர் சர்ச்சில் ஆட்சிக்கெதிராக இங்கிலாந்து மக்கள் சபையில் கொண்டு வந்தனர்.

சர்ச்சில் சார்ந்துள்ள கன்சர்வேடிவ் (டோரி) கட்சியினர் தங்கள் கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரையும் திரட்டிவந்து ஓட்டுப் போடச் செய்து 18 ஓட்டுகள் அதிகம் பதிவு செய்து, கண்டனத் தீர்மானத்தை தோல்வியுறச் செய்தனர்.

தீர்மானத்தின் மீது கடுமையான விவாதமும் நடைபெற்றிருக்கிறது.

மக்கள் சபைக்கு காலியாயுள்ள மேற்கு டெர்பியைச் சேர்ந்த லிவர்பூல் தொகுதி இடத்திற்கு ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியுள்ளது.

இத்தொகுதியில் உள்ள மொத்தம் 50,000 வாக்காளர்களில், 1951-ல் நடைபெற்ற தேர்தலில் 1,700 ஓட்டுகள் மட்டுமே அதிகம் பெற்று, கன்சர்வேடிவ் கட்சியினர் வெற்றி பெற்றிருந்தனர்.

இப்போது இத்தொகுதியில் கிடைக்கும் முடிவு பிரிட்டிஷ் அரசியல் போக்கில் ஒரு குறிப்பிட்ட மாறுதலை உண்டாக்கக் கூடுமாம்.

ஈடன் 'சமாதானப் பரிசு' பெறுகிறார்

பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி சர். அந்தோனி ஈடனுக்கு, சுமார் 2,100 பவுன் (21,000 டாலர்) பெறுமான 'வாடெலர்' சமாதானப் பரிசு தரப்படுவதாக 'கார்னெஜி' நிறுவனத்தின் டைரெக்டர்கள் அறிவித்துள்ளனர்.

"மேற்கு ஐரோப்பிய நாடுகளிடையே உள்ள கூட்டுறவை வளர்க்க அவர் ஆற்றியுள்ள அரும் பணிக்காகவும் அந்த வகையில் உலக சமாதானம் காணப் பாடுபட்டமைக்காகவும் இந்த சமாதானப் பரிசு அளிக்கப்படுகிறது" என்று அந்த நிறுவனத்தார் அறிவித்துள்ளனர்.

மரண தண்டனை ஆயுள் தண்டனையாகிறது

நைரோபியில், ஜஸ்வந்த் சிங் என்ற சீக்கியத் தொழிலாளி ஒருவருக்கு, சட்ட விரோதமாக வெடிமருந்து வைத்திருந்த குற்றத்திற்காக விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக உகாண்டா கவர்னர் குறைத்திருக்கிறார் என்று தெரிகிறது.

மிகப் பழைய கார்!

உலகத்திலேயே மிகப் பழமையான, பெட்ரோல் இயந்திரம் பொருத்தப்பட்ட கார், இன்னும் பிரயாணம் செய்யத் தகுதியுடையதாயிருக்கிறதாம்.

கோபன் ஹேகன் நகரிலிருக்கும் பொருட்காட்சிசாலையிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ள அந்தக் கார் 1886-ல் செய்யப்பட்டதாம்.

ஹாம்மெல் என்ற அந்தக் கார் 'ராயல் டேனிஷ் ஆட்டோ கிளப்' நிர்வாகிகளால் கொண்டுவரப்பட்டதாம்.

மணி ஒன்றுக்கு இப்போது அந்தக் கார் 4½ மைல் வேகம் செல்கிறதாம்.

அதை புறப்படச் செய்ய அரை மணி நேரமாகிறதாம். அதை இரண்டு டேனிஷ்காரர்கள் ஓட்டிக் கொண்டிருக்கின்றனராம்!

ரூ. 128 ஆயிரத்திற்காக பிணியாளர் நலம் பலியிடப்படுவதா?

இட்லி - சாம்பார் நோயைக் கூடுதலாக்கும்?

சென்னை அரசியலார் விபரீதப் போக்கு

"சர்க்கார் மருத்துவ மனைகளில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள், தங்களுக்குக் காலை நேரங்களில் சிற்றுண்டியாகக் கொடுக்கப்பட்டு வரும் ரொட்டி, வெண்ணெய், சர்க்கரை ஆகியவற்றுக்குப் பதில், இட்லியும் சாம்பாரும் கொடுக்கப்படுவதை விரும்பி உண்பதால் இனிமேல் சர்க்கார் மருத்துவமனைகளில் எல்லாம் நோயாளிகளுக்குக் காலைச் சிற்றுண்டியாக இட்லியும் சாம்பாருமே கொடுக்கப்பட வேண்டும்,"

என்று சென்னை சர்க்கார் உத்திரவொன்றைப் பிறப்பித்துள்ளனர்.

ஏற்கனவே, சென்னை நகரிலுள்ள சில மருத்துவமனைகளிலும், வெளியூர்கள் சிலவற்றிலுள்ள மருத்துவ மனைகளிலும் இருக்கின்ற நோயாளிகளுக்கு, இட்லியும் சாம்பாருமே சிற்றுண்டியாகக் கொடுக்கப்பட்டு வருவதாகவும், அங்குள்ள நோயாளிகள் மிக விருப்போடு அவற்றை வாங்கிச் சாப்பிடுவதாகவும் கூறப்படுகிறது.

சர்க்காரின் இவ்வறிக்கை பற்றிக் குறிப்பிடுகையில், சென்னை மாநில சுகாதார அமைச்சர் ஷெட்டி, 'இப்புதிய ஏற்பாட்டின் காரணமாக நோயாளிகளின் உணவுக்காக சர்க்கார் செலவு செய்யும் தொகையில், ஆண்டொன்றுக்கு ரூ. 1,28,000 இனிமேல் மிச்சம் காணும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்!

பொதுக் கூட்டங்கள்: சர்க்கார் உத்திரவு

"நகரப் பொதுப் போக்குவரத்துக்குத் தடை உண்டாக்குவது குற்றம் என்று காணப்படுவதால், இனிமேல், நகரிலுள்ள தெருக்களிலோ, தெரு முனைகளிலோ, போக்குவரத்துக்கான பொதுச் சாலை, வீதிகளிலோ பொதுக்கூட்டங்கள் நடத்தப்படக்கூடாது: இவ்வுத்திரவை மீறி பொதுக் கூட்டங்கள் நடத்தும் பொறுப்பாளிகள் மீது, சட்டப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்: அம்மாதிரியான இடங்களில் கூட்டங்கள் நடத்துவதற்கு இனிமேல் ஒலிபெருக்கி அனுமதி ('லைசென்ஸ்') யும் கிடையாது" என்று சென்னை சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறது.

போக்குவரத்துக்குத் தடை ஏற்படும் முறையில் தெருக்கள், சாலைகள் ஆகியவற்றில் பொதுக்கூட்டங்கள் நடைபெறுவதாகவும், அவற்றால் தங்களுக்குப் பலப்பல இடையூறுகள் ஏற்படுகின்றதாகவும் பொதுமக்கள் சர்க்காரிடம் புகார் செய்துள்ளதாகவும், அதன் பேரிலேயே இவ்வுத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதெனவும் தெரிய வருகிறது.

ஆந்திராவில் கவர்னர்-ஆட்சி பிரகடனத்திற்கு மக்கள் சபை ஒப்பம்

ஆந்திர மாநில நிர்வாகப் பொறுப்பை தாம் எடுத்துக் கொள்வதாக, குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் வெளியிட்ட பிரகடனத்தை மக்கள் சபை அங்கீகரித்தது.

பிரேரணைக்கு சாதகமாக 154 - வாக்குகளும், எதிராக 35 வாக்குகள் மட்டும் பதிவாயினவாம்.

"ஆந்திராவில் இன்னும் மூன்று மாதங்களில் தேர்தல் நடைபெறும்: தேர்தலை சுயேச்சையாக, நியாயமாக, நேர்மையாக, விருப்பு வெறுப்பின்றி, எந்தக் கட்சி வெற்றி பெறும் என்ற கவலையின்றி நடத்த இந்திய சர்க்காரும், கவர்னரும் பெருமுயற்சி எடுத்துக் கொள்வார்கள் என்று உறுதி கூற விரும்புகிறேன்," என உள்நாட்டு மந்திரி டாக்டர் கட்ஜு மக்கள் சபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கோபி தாலுகா விவசாயிகள் மாநாடு

பிற்பகல் நிகழ்ச்சி

கோபி நாகையா தியேட்டரில், 15—11—54 மாலை 3 மணிக்கு தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை தலைமையில், கோபி விவசாயிகள் மாநாட்டின் பிற்பகல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. (முற்பகல் நிகழ்ச்சிகள் ஏற்கனவே வெளியாகியுள்ளன.)

தோழர் பி. எஸ். நல்லாக் கவுண்டர் எம். எல். ஏ., அவர்கள் விவசாயிகளின் நிலைபற்றி விரிவுரை ஆற்றினர்.

பின்னர் மாநாட்டுப் பொதுச் செயலாளரான தோழர் கே. கே. இரத்தினம் அவர்கள், மாநாட்டு அறிக்கை வாசித்து, வரவு—செலவு கணக்குகளையும் படித்தார்.

இறுதியில் தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள், விவசாயிகளின் வாழ்க்கை நிலை உயர்வதற்கான அடிப்படைத் தேவைகளை விளக்கி அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

கோவை மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து மாநாட்டைச் சிறப்பித்தனர்.

தீர்மானங்கள்

நிலச் சீர்திருத்தப் பிரச்சினையில் மாநில சர்க்கார் அக்கரைகொண்டு ஏற்பாடுகள் செய்வது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டும், நிலச் சீர்திருத்தத்தை அமுல் நடத்தும் விஷயத்தில் அடிப்படையாக ஒருவர் வைத்திருக்கக் கூடிய நிலத்தின் அளவு, உயர்ந்த பட்சம் கூட்டுக் குடும்பமாக இருந்தால் 50 ஏகராவும், தனிக் குடும்பமாகவிருந்தால் 15 ஏக்கராவும் நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், மற்றும் பல தீர்மானங்களும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன

ஐரோப்பியப் பாதுகாப்பு!

மாஸ்கோவில் மாநாடு!

சோவியத் ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், அநேகமாக பின்லாந்து ஆகியவை நவம்பர் 29—ல் மாஸ்கோவில் மாநாடொன்றில் கூடலாம் என பிரிட்டிஷ் அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றனவாம்

இந்த மாநாட்டின் நோக்கம் இரண்டு கூறுகளையுடையதாயிருக்கலாமெனவும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஒன்று, சோவியத் ரஷ்யாவுடன் அதன் சார்புடைய நாடுகள் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வது; 'இரண்டு, ஜெர்மனி ஆயுதபாணியாக்கப்பட்டிருப்பதைக் கண்டிப்பதுடன், பல்வேறு சமூக அமைப்புகள் சமாதானமாக ஒரே காலத்தில் வாழ முடியும் என்பதை ஆதரிக்கும் வகையில் 'புதிய ஸ்டாக்ஹோம் பிரகடனம்' ஒன்றையும் வெளியிடுவர் என்று சொல்லப்படுகிறது

இத்தகைய ஒரு கோரிக்கை, ஒரு சமாதான உடன்படிக்கையாக உருப்பெறலாம், இப்போது மாநாட்டில் பங்கு பெறுகிற நாடுகள் ஏற்றுக்கொண்டான பிறகு அத்தகைய ஒரு ஒப்பந்தம், இதர ஐரோப்பிய நாடுகளையும் அதில் சேர்த்துக்கொள்ள சித்தமானதாயிருக்கும் எனவும் கூறப்படுகிறது

கழகக் கூட்டம்

★

திருப்புத்தூர்
(இராமநாதபுரம் மாவட்டம்)
தேரடித் திடலில்
22—11—54 மாலை 5 மணிக்கு
தலைவர்: பி. இராமையா
பேசுவோர்:
ஈ. வே. கி. சம்பத்
மணிமாறன்

இலக்கிய சொற்பொழிவுகள்

21-11-54 காலை 9-30 மணிக்கு திருச்சி, சின்ன செட்டித் தெரு, சித்தி விநாயகர் ஆலயத்தில், திருவள்ளுவர் மன்றச் சார்பில், இலக்கியச் சொற்பொழிவுகள் தோழர் தி. ரா. தருமராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் வீ. து. தயாளசாமி, தி. மா. பரமசிவம், நட. நாராயணன், அ. இராசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

21—11—54 காலை 9½ மணிக்கு சென்னை, முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலை விநாயகர் கோயில் தெரு, முத்தமிழ் மன்றத்தில் 'மதமும்—கடவுளும்' என்பது பற்றி, தோழர் என். இராமதாஸ் தலைமையில் சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

குறள் வகுப்பு

22—11—54 மாலை 6 மணிக்கு சென்னை, புரசை, வேளாளர் தெரு, 100-ம் எண்ணுள்ள வேளாளர் சங்கத்தில், தோழர் க. அன்பழகன் குறள் வகுப்பு நடத்துவார்.

கோவை மாவட்ட பீடித் தொழிலாளர் பிரதிநிதிகள் கூட்டம்

22—11—54 காலை 10 மணிக்கு மேற்படி சங்கத்தில் நடைபெறும். அதுபோது, இன்று நிலவும் நெருக்கடிகளைப் பரிசீலித்து முடிவு செய்ய வேண்டியிருப்பதால், மாவட்டப் பிரதிநிதிகளை பாக்டரி வாரியாகத் தேர்ந்தெடுத்தனுப்பக் கோரப்படுகிறது.

'ஆதிதிராவிட மக்களும் எதிர்காலமும்'

22-11-54 மாலை 5-30 மணிக்கு சென்னை, இராயபுரம், மீனாட்சி அம்மன்பேட்டை, எண் 1, ராமநாய்க்கன் தெருவிலுள்ள வட சென்னை ஆதிதிராவிட மகாஜன சபையில், தோழர் ப. ரா. முருகையா தலைமையில் 'ஆதிதிராவிட மக்களும்-எதிர்காலமும்' என்னும் பொருள் பற்றி பலர் பேசுவர்.

நெய்வேலி: இலாபகரமான தொழிலாக இருக்கும்

பிரிட்டிஷ் நிபுணர் குழு அறிக்கை!

நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுப்பதுபற்றி ஆராய்ச்சி செய்ய இந்திய சர்க்கார் வரவழைத்திருந்த பிரிட்டிஷ் நிபுணர்கள் ஆராய்ந்து அறிந்து, இந்திய சர்க்காருக்குத் தந்துள்ள அறிக்கையின் நகல் இப்போது சென்னை சர்க்காருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாம்.

நெய்வேலியில் கிடைக்கும் 'லிக்னைட்' தோண்டி எடுக்கப்பட்டால் ஏராளமான வர்த்தகப் பொருள்கள் கிடைக்குமெனவும், நெய்வேலிச் சுரங்கம் நடத்துவது ஒரு மிகப் பெரிய இலாபகரமான தொழிலாக இருக்குமெனவும் பிரிட்டிஷ் நிபுணர்கள்கருத்தறிவித்திருப்பதாக அறியக்கிடக்கிறது.

அறிக்கையில் மேலும், சுரங்கம் தோண்டுவதற்குத் தேவையான இயந்திரங்களும் நிபுணர்கள் போன்ற விபரங்களும் தரப்பட்டுள்ளனவாம்.

சென்னை அரசாங்கம் தனக்கு வந்துள்ள நகல் அறிக்கையைப் பரிசீலித்து வருகிறது.

சிறைத் தண்டனை அடைந்தோர் எண்ணிக்கை

சென்ற ஆண்டினும் இவ்வாண்டு அதிகரித்துள்ளதாம்

"சென்ற ஆண்டில், சென்னை மாநில சிறைச்சாலைகளில், சிறை தண்டனை பெற்றோரின் எண்ணிக்கை மிக அதிகமாகியதால், சிறைச்சாலைகளில் ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்க்க, சர்க்கார் உத்திரவின்பேரில், 5,200 கைதிகள், தங்கள் தண்டனை காலம் முடிவுறுமுன்னரேயே விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். இருந்தபோதிலும் சிறைச் சாலைகளில் இன்னும் நெருக்கடி தீரவில்லை. தினமொன்றுக்கு சராசரி இரண்டாயிரமாக கைதிகளின் எண்ணிக்கை பெருகிற்று. 1952-ல், கைதி ஒருவனின் ஒரு ஆண்டுக்கான சராசரி செலவு ரூ. 356—11—3-ஆக இருந்தது; அடுத்த ஆண்டில் (1953) 389—11—0 - ஆக உயர்ந்தது. இதன் காரணமாக, மொத்தத்தில், சென்ற ஆண்டில் மட்டும் சிறை இலாகாவின் செலவு சுமார் 6 இலட்சம் ரூபாய்கள் அதிகமாகியது."

இவ்வாறு, சென்னை சர்க்கார் சிறை இலாகா நிர்வாக அறிக்கை ஒன்றில் காணப்படுகிறது.

சென்ற ஆண்டில், சென்னையில் 25,209 பேரும், தென் ஆற்காட்டில் 8,249 பேரும், மதுரையில் 8,127 பேரும், சேலத்தில் 8,112 பேரும், கோயம்புத்தூரில் 7,630 பேரும், செங்கல்பட்டில் 4,452 பேரும் சிறை செய்யப்பட்டார்கள்.

மது விலக்குச் சட்டத்தின் கீழ் 1952-ல் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 33,319 ஆக இருந்தது; 1953-ல் 33,984 ஆக உயர்ந்தது.

சென்ற ஆண்டில், மொத்தம் 8,260 பெண்கள் சிறையிலடைக்கப்பட்டனர். இவர்களில் 6,479 பேர் மணமானவர்கள்; 924 பேர் விதவைகள்; 853 பேர் மணமாகாதவர்கள்.

1952-ல் மொத்தம் கைது செய்யப்பட்ட பெண்களில் மணமானவர்கள் 5,382; மணமாகாதவர்கள் 856; விதவைகள் 786 பேர் என்றும் அந்த அறிக்கையில் மேலும் காணப்படுகிறது.

'ஸ்டான் வாக்' தொழிற்சாலை திறப்பு

ஸ்டாண்டர்ட் வாக்யூம் ஆயில் கம்பெனிக்குச் சொந்தமான ஸ்டான்வாக் எண்ணெ சுத்திகரிப்பு தொழிற்சாலை ஒன்றை, பம்பாய் அருகிலிருக்கும் ட்ராம்பேயில் இந்திய சர்க்காரின் உற்பத்தி இலாக்கா மந்திரி கெ. வி. ரெட்டி திறந்து வைத்திருக்கிறார்.

அத்தொழிற்சாலை ரூ. 17½ கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. அதுவே, இந்தியாவின் முதல் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையாகும்.

சில விபரங்கள்

'ஸ்டான்வாக்' எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையின் கட்டிட வேலை 18 மாதங்களுக்கு முன் துவங்கியது. 7,000 பேர் கட்டிட வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

சுமார் 600 பேர்களுக்கு நிரந்தரமான உத்தியோகம் கிடைக்கும்.

தினந்தோறும் சராசரியாக, 25,000 பீப்பாய் எண்ணெய் சுத்தம் செய்யப்படும்.

ஆண்டொன்றுக்கு 9 கோடி காலன் பெட்ரோல், 4 கோடி காலன் கெரோசின், 5 கோடியே 90 லட்சம் காலன் டீசல் எண்ணெய், 5 கோடியே 80 லட்சம் காலன் எரிபொருள் எண்ணெய் இவை எல்லாம் அங்கு உற்பத்தியாகும்.

மத்திய கிழக்குப் பிரதேசத்திலிருந்து கச்சா எண்ணெய் தருவிக்கப்பட்டு, அங்கு சுத்தி செய்யப்படும்.

இத்தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ள 'ட்ராம்பே' எனும் இடம், பம்பாய் நகரிலிருந்து வடகிழக்கே 18 மைல்- தொலைவிலிருக்கிறது.

பாகிஸ்தான் 'ஒற்றர்' தண்டனை பெற்றார்

இந்தியாவில் 'வேவு' பார்த்தாராம்

புதுடில்லி, நவ. 19—

இந்தியாவில் ஒற்றர் வேலை பார்த்ததாக பாகிஸ்தான் சி. ஐ. டி. உதவி சப்-இன்ஸ்பெக்டர் ஜான் மாத்யூ என்பவருக்கு டில்லி செஷன்ஸ் நீதிபதி ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்தார்.

அப்ரூவராக மாறிவிட்ட பைபிள் சங்க குமாஸ்தா ரெஹமத் மாஸி என்பவரை நீதிபதி விடுதலை செய்தார்.

வழக்கு விசாரணை இரகசியமாகவே இருந்தது; எதிர்ப்புமட்டும் பகிரங்கமாக்கப்பட்டது.

தண்டிக்கப்பட்டவர் இந்தியாவில் புகுந்து, ரெஹமத் மாஸியின் உதவியுடன், புதுடில்லியில் உள்ள விமானப்படை தலைமை அலுவலகப் பணியாளரான கார்பரல் ரங்கய்யா என்பவருடன் தொடர்பேற்படுத்திக் கொண்டு, புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதுவராலயத்திற்கு, இந்திய இராணுவம் பற்றிய இரகசியங்களைச் சேகரித்துத் தந்துகொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

போலீசார் இவரிடமிருந்து இரகசிய 'ரிக்கார்டு' ஒன்றைக் கைப்பற்றியதின் பேரில் இவரை கடந்த ஏப்ரல் 7-ந் தேதி கைது செய்தனராம்.

இந்த 'ஒற்றர்' வேலை வெளியானதை யொட்டி, பாகிஸ்தான் தூதுவராலயத்தில், இராணுவ ஆலோசகராக இருந்த கர்னர் நாசீர் அகமத்கான் என்பவர் இந்தியாவில் தொடர்ந்து இருப்பது விரும்பத்தக்கதல்ல என்ற இந்திய அரசாங்கத்தின் சூசகமான அறிவிப்பின்படி பாகிஸ்தான் அரசாங்கம் நடந்து கொண்டது நினைவிலிருக்கலாம்.

இந்திய ரயில்வேக்கள் சீரமைப்பு

1 - கோடி டாலர் உதவி

இந்திய இரயில்வேக்கள் சீரமைப்புத் திட்டத்திற்காக, இவ்வாண்டு தொழில் நுணுக்க உதவித் திட்டத்தின் கீழ், அமெரிக்கா ஒரு கோடி டாலர் உதவியளிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்று புதுடில்லியில் கையெழுத்தாகியிருப்பதாகத் தெரிகிறது.

மற்றும் ஒரு - தலைவர் கைது

திரு-தமிழகக் காங்கிரஸ் முக்கியஸ்தரான திரு. ஏ. எம். சைமன் என்ற சட்டசபை உறுப்பினரும் கடந்த ஆக. 11-ல் நடைபெற்ற 'விடுதலை தின விழா' வழக்குகள் சம்மந்தமாகக். கைது செய்யப்பட்டுள்ளாராம்.

இவரைச் சேர்த்து இதுவரை 5 எம்.எல்.ஏ.-க்கள் கைதாகியுள்ளனர்.

1,112பேர் கைது

பதவியிலிருந்து நீக்கப்பட்ட எகிப்து ஜனாதிபதி நஜீபுடன் உறவு வைத்துக்கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்ற சகோதரத்துவ நிறுவனத்தைச் சேர்ந்த 1,112 பேர் இதுவரையிலும் கைது செய்யப்பட்டுள்ளனரெனக் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.